முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.07.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 63 திருக்கோயில்களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் வகையிலான திருப்பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

63 திருக்கோயில்களின் புனரமைப்பு திருப்பணிகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!... முதல் பக்கத் தொடர்ச்சி

அருள்மிகு வலம்புரநாதசுவாமி திருக்கோயில், கீழையூர், அருள்மிகு கடைமுடீஸ்வரசுவாமி திருக்கோயில், பெருந்தோட்டம், அருள்மிகு ஜரா தீஸ்வதீஸ்வரர் திருக்கோயில், தலைச்சங்காடு, அருள்மிகு சங்க ரணேஸ்வரர் திருக்கோயில், மூவலூர், அருள்மிகு மார்கச யேஸ்வரர் சுவாமி திருக்கோயில், மகேந்திரப்பள்ளி, அருள்மிகு திருமேனியழகர் திருக்கோயில்;

கடலூர் மாவட்டம், திருமூலஸ் தாணம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், ராஜேந்திரசோழகன், அருள்மிகு தோளீஸ்வரர் திருக் கோயில், திருவட்டத்துறை, அருள் மிகுதீர்த்தபுரீஸ்வரர்திருக்கோயில், திருவேட்களம், அருள்மிகு பாசுப தீஸ்வரர் திருக்கோயில், திருச்சோ புரம், அருள்மிகு திருச்சோபுரநாதர் திருக்கோயில், திருவதிகை, அருள்மிகு வீரட்டானேசுவரர் திருக்கோயில், திருமாணிக்குழி, அருள்மிகு வாமனபுரீஸ்வரர் திருக்கோயில், திருவாமூர், அருள் மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், வி.நெற்கு ணம், அருள்மிகு ஆளுடையநாய னார் திருக்கோயில், கப்பூர், அருள் மிகு செய்தருளீஸ்வரர் திருக்கோயில், டி.முடையனூர், அருள்மிகு அரு ணாசலேஸ்வரர் திருக்கோயில், கூகையூர், அருள்மிகு காரீயாம்பு ரீஸ்வரர் திருக்கோயில், கச்சிராப் பாளையம், அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், கூகையூர், அருள்மிகு சொர்ணபு ரீஸ்வரர் திருக்கோயில், எலவனா சூர்கோட்டை, அருள்மிகு அர்த்த நாரீஸ்வரர் திருக்கோயில், வரஞ்ச ரம், அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக் கோயில், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம், அருள்மிகு ரிஷபேஷ்வரர் திருக்கோயில், காஞ்சி, அருள்மிகு கரைகண்டீஸ் வரர் திருக்கோயில், பிரம்மதேசம் புதூர், அருள்மிகு ருத்ரகோட்டீஸ் வரர் திருக்கோயில், தாமரைப்பாக் கம், அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்;

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சி புரம், அருள்மிகு பச்சைவண்ணர் மற்றும் பவள வண்ணர் திருக்கோ யில், காஞ்சிபுரம், அருள்மிகு அழ கிய சிங்கபெருமாள் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், செஞ்சி பானம்பாக்கம், அருள்மிகு ஜென மேஜெயீஸ்வரர் திருக்கோயில், செங்கல்பட்டு மாவட்டம், மண்ணி வாக்கம், அருள்மிகு மண்ணீஸ்வ ரர் திருக்கோயில், வேலூர் மாவட் டம், அன்பூண்டி, அருள்மிகு திருத் தாளீஸ்வரர் திருக்கோயில், திருவ லம், அருள்மிகு வில்வநாதீஸ்வரர் திருக்கோயில், இராணிப்பேட்டை மாவட்டம், பள்ளூர், அருள்மிகு திருக்குகேஸ்வரர் திருக்கோயில், பெருங்காஞ்சி, அருள்மிகு அகத் தீஸ்வரர் திருக்கோயில், காவேரிப் பாக்கம், அருள்மிகு அபயவரத ராஜப் பெருமாள் திருக்கோயில்;

ஆகிய 63 திருக்கோயில்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதன் பழமை மாறாமல் புனரமைக் கும் வகையிலான திருப்பணிகளை நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

இதன்மூலம் நமது கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரி யத்தை பறைசாற்றும் காலப் பெட்டகங்களாக திகழும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக் கோயில்களின் தொன்மை மற்றும் கட்டடக் கலை போன்றவற்றை வருங்கால தலைமுறையினரும் அறிந்து கொள்ள பேருதவியாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற் றும் சட்டத்துறை அமைச்சர் துரை முருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செய லாளர் நா.முருகானந்தம், சுற் றுலா, பண்பாடு மற்றும் அறநிலை யங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவா சன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக காஞ்சிபுரத்திலிருந்து கைத்தறி மற் றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப் பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழி லரசன், க.சுந்தர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 15.7.2025 அன்று உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் முகாம்கள் தொடங்கி வைக்கப்பட உள்ளது. அதனை தொடர்ந்து வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, பவானி மெயின் ரோடு, பிளாட்டினம் மஹாலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாவட்ட கண்காணிப்பாளர் சுஜாதா, மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

'தமிழில் அர்ச்சனை' எனும் புரட்சியை முன்னெடுத்தவர்!

திராவிட இயக்கத்துக்குத் துணையாக நின்ற மாண்பாளர்!

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 13 - "தமிழில் அர்ச்சனை எனும் புரட்சியை முன்னெடுத்தவர், திராவிட இயக்கத்துக்குத் துணையாக நின்ற மாண்பாளர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்" என்று அவரின் நூற்றாண்டு நிறைவையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவையொட்டி முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங் களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு: -

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவு இன்று!

தமிழில் அருச்சனை எனும் புரட்சியை முன்னெ டுத்தவர்!

சமூகநீதித் தளத்தில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் எனத் திராவிட இயக்கத்துக்குத் துணையாக நின்ற மாண்பாளர்!

சோவியத் யூனியன் பய ணத்தின் உந்துதலால், பிரத மர் இந்திரா காந்தி அவர்களே பாராட்டிய 'குன்றக்குடிக் கிராமத் திட்டம்' கொண்டு வந்த பொதுவுடைமைச் சிந்தனையாளர்!

பகட்டுச் சம்பிரதாயங் களைத் தவிர்த்து மனித நேயம் போற்றிய சமத்துவச் சிந்தனையாளர்!

இந்தி எதிர்ப்புப் போரில் பங்கெடுத்த தமிழுணர்வாளர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விருப்பத்தின் வழியே தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பின ராகி, மேலவையில் அனைத் துச் சாதியினரும் அர்ச்சக ராகப் பேசிய பெருந்தகையா ளர்!

தமிழ்ச்சமூகத்தின் சமூக வியல் உள்ளடக்கிய இறை யியல் அடையாளமாக விளங்கும் திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணா மலை ஆதீனம் குன்றக்குடி 45ஆவது மகாசந்நிதானம் திருப்பெருந்திரு தெய்வசிகா மணி அருணாசல தேசிக பர மாச்சார்ய சுவாமிகள் எனும் குன்றக்குடி அடிகளாரின் புகழ் வாழ்க!

அவரது வழியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் தொண்டு தொட ரட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற - ரூ 2.15 கோடிக்கான காசோலை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 13- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலை மைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் வளர்ச்சிக் கழ கத்தின் பணிகள் தொய்வின்றி நடை பெற 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க் கான காசோலையை தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரனிடம் வழங்கினார்.

அனைத்து அறிவுத் துறைகளிலும் தமிழ் வளர்ச்சி காணவேண்டும் என்ற தலையாய நோக்கத்தோடு 1946-ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த தி.சு.அவினாசி லிங்கம் செட்டியார் அவர்களால் தமிழ் வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்பட் டது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உயர் குறிக்கோளாகிய கலைக் களஞ்சியத் திட்டத்தை தி.சு.அவினாசிலிங்கம் இந் திய விடுதலை நாளான 15.08.1947 அன்று அறிவித்தார். தமிழ் வளர்ச்சி யில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களும் அவரு டைய இந்த அறிவிப்பை மெத்த மகிழ்ச் சியுடன் வரவேற்றனர்.

சென்னைப் பல்கலைக்கழக வளா கத்தில் 20.10.1947-இல் கலைக்க ளஞ்சியப் பணி தொடங்கப் பெற்றது. அன்றைய துணைவேந்தர் முனை வர் ஆ.இலக்குமணசாமி தலைமை யில் கலைக்களஞ்சிய உருவாக்கத் திற்கு 'அறிஞர் குழு' ஒன்று அமைக்கப்பட்டது.

பேராசிரியர் மு.வரதராசன், பேராசி ரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, பேராசிரி யர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டி.கே.சிதம்பரநாத முதலியார் ஆகி யோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். கல்கி ரா.கிருஷ்ண மூர்த்தியும் பேராசிரியர் கே.சுவாமிநா தனும் இக்குழுவின் செயலாளர்களாக நியமிக்கப் பெற்றனர். ம.ப.பெரிய சாமித்தூரன் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பொறுப் பேற்றார். சென்னைப் பல்கலைக்கழ கம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத் திற்குரிய இடத்தைத் தந்து உதவியது.

தமிழில் கலைக்களஞ்சியத்தைப் பத்துத் தொகுதிகளாக கொண்டுவர வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு தொகுதியும் ஏறத்தாழ 750 பக்கங்களைக் கொண்டதாகவும், பொதுமக்களுக்கும் விளங்கக் கூடிய நடையில், அறிவுத் துறைகள் அனைத் தையும் திறம்பட எடுத்துரைப்பதாக வும், பல்துறை அறிவு பற்றிய பதிவு களை அகரவரிசைப்படுத்தி, அவற்றைக் கட்டுரை வடிவில் தெளி வாக விளக்குவதாகவும் அமைந்த சிறப்பானதோர் அறிவுக் கருவூலமா கக் கலைக்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது.

முதல் தொகுப்பு, அதன் பணி தொடங்கி 6 ஆண்டுகட்குப் பின் 1954 -இல், 742 பக்கங்களுடன் வெளிவந் தது. இதற்கு 207 அறிஞர்கள், அவர வர் நிபுணத்துவம் பெற்ற துறைகளில் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். பணி தொய்வின்றித் தொடர்ந்து நடந் தது.1968-இல் 10-ஆம் தொகுதி (இணைப்புத் தொகுதி) வெளியா யிற்று. இவற்றுள் 5-ஆவது தொகு தியை அன்றைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் வெளி யிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது கலைக்களஞ்சிய ஆக்கப்பணிக் குப் பெருமை சேர்த்தது.

இந்திய மொழிகளில் 10 தொகுதிக ளைக் கொண்ட விரிவான கலைக்க ளஞ்சியம் தமிழில் தான் முதன் முத லாக வந்தது என்பது பெருமிதமான செயலாகும். இதைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆக்கபூர்வமான தமிழ்த் தொண்டாகும். இவற்றிற்கு 2240 அறிஞர்கள் பங்களிப்புச் செய்திருக் கின்றனர். தமிழ் வளர்ச்சிக்கழகம் வாயிலாக இதுவரை 60 நூல்கள், கலைக்களஞ்சியக் குறுந்தகடு ஆகி யவை வெளியிடப்பட்டுள்ளன.

கன்னித் தமிழ், கணினித் தமிழா கிக் கொண்டிருக்கிறது. மென்தமிழ், மின் தமிழாகிக் கொண்டிருக்கிறது. மின் தமிழாகத் தமிழை முழுவது மாக மாற்றினால், வரும் தலைமுறை களுக்கு கருவிகளே தமிழைக் கற்றுக் கொடுக்கும். ஆகவே இப்போது செயற்கை நுண்ணறிவுக்கும் தமி ழைக் கொண்டு சேர்க்கும் திட்டப் பணி களைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளவும், தொடர்ந்து தொய் வின்றி செயல்படவும் உதவிடும் வகையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15.4.2025-ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2025-2026ஆம் ஆண் டிற்கான மானியக் கோரிக்கையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் "தமிழ் வளர்ச் சிக் கழகம் தொய்வின்றி செயற்பட ரூபாய் 2 கோடி வைப்புத் தொகை வழங்கப்படும்" என அறிவிக்கப்பட் டது.

அந்த அறிவிப்பினை செயற்படுத் திட, தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள் ளும் வகையிலும் 2 கோடி ரூபாய் வைப்புநிதியாக வைத்து அதிலிருந்து வரும் வட்டித்தொகையை மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் பயன்படுத்திக் கொள் ளும் வகையிலும், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான காசோ லையை முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் தமிழ் வளர்ச்சிக் கழ கத் தலைவர் முனைவர் ம.இராசேந் திரனிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலை மைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் வே.ராஜாராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் உட னிருந்தனர்.

முதலமைச்சர் அவர்கள் 03.07.2025 அன்று சென்னையில் காணொளிக்காட்சி வாயிலாக (Offline) கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக கட்டிமுடிக்கப்பட்ட நகர்ப்புற நல வாழ்வு மையம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, மத்திய மண்டலம், வார்டு எண்.63க்குட்பட்ட திருச்சி சாலை, ஒலம்பஸ் பகுதியில் கட்டப்பட்ட நகர்ப்புற நல வாழ்வு மையத்தினை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன் பார்வையிட்டனர். உடன் த.குமரேசன், விஜயகுமார், மரு.பாலுசாமி, மரு.சுமதி, மீனாலோகு, பெ.மாரிசெல்வன், சாந்தி முருகன், மரு.மோகன், மரு.பூபதி, செந்தில்குமரன், துரைமுருகன், கருப்பசாமி, முனியம்மாள், காயத்திரி, ஹேமலதா, குணசேகரன், உதவி பொறியாளர் நடராஜன், மருத்துவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.